 காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் ஒரு பெண்ணிடம் காவல் துறையினர் தகாத முறையில் நடந்து கொண்டதாகக் கூறப்படுவது குறித்து

[1978 மார்ச் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் இதிலே பேசக் கூடாது. தயவு செய்து உட்காருங்கள்.

6. கவன ஈர்ப்பு.

(அ) திருச்சி மாவட்டத்தில் கைத்தறி நூல்பாவு பசை போடும் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து 41-வது விதியின் கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து திருவாளர்கள் ஆர். உமாநாத், ஆர். கிருஷ்ணன், பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள், திரு. உமாநாத் அவர்கள்.

திரு. ஆர். உமாநாத் : தலைவரவர்களே 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

"கைத்தறிக்கு உயிர்நாடியான கைத்தறி நூல் பாவு பசை போடும் தொழிலாளர்கள், நெசவாளர்களுக்கு வழங்கப்படும் எல்லா நிவாரணங்களிலிருந்தும் புறக்கணிக்கப்பட்டிருப்பதால் 20-2-1978 முதல் திருச்சி மாவட்டம் முழுவதும் வேலை நிறுத் தம் துவக்கியிருப்பது பற்றியும், அதன் விளைவாக அம்மாவட்டத் தில் கைத்தறித் தொழிலே ஸ்தம்பிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது குறித்தும்"

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில் நெசவாளர் கள் வசிக்கும் சில பகுதிகளில் குறிப்பாக மணல்மேடு, உறையூர் பகுதிகளில் நெசவாளர் பாவுகளுக்கும், வீடுகளுக்கும் வெள்ளம் புயல் காரணமாக குறிப்பிடத்தக்க அளவுக்கு சேதம் ஏற்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த நெசவாளர்களுக்கு, தங்களின் பணியை மீண்டும் தொடங்கும் வரை வாழ்க்கை செலவிற்கு அந்தந்த கூட்டுறவுச் சங்கங்களே முன்பணம் கொடுத்து உதவின. சேதமடைந்த வீடுகளை புதுப்பிப்பதற்கு தலா ரூபாய் 500ம் புதிய பாவுகளை அமைப்பதற்கு தலா ரூபாய் 125ம் நெசவாளர் களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வழங்கப்பட்டது.

கைத்தறி துணைத் தொழிலாளர்களான நூல் பாவு இடுவோர், பசை போடுபவர், நூல் சுற்றுபவர் ஆகிய தொழிலாளர்களும் தங்களுடைய கருவிகளுக்கு சேதமடைந்து விட்டதாகவும் நெச வாளர்களுக்கு அளித்த பண உதவியைப் போலவே தங்களுக்கும்

அளிக்க வேண்டும் என்று கோரினர். துணை தொழிலாளர்கள் நெசவாளர்களைப் போன்று அதிகம் பாதிக்கப்படவில்லையாதலால், நெசவாளர்களுக்கு அளிக்கப்பட்ட உதவிகளை இவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்று முதல் (Pr liminary Enquiry) விசாரணையில் தெரிய வரவில்லை. இருந்தபோதிலும் இவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கு ஈடுசெய்ய வங்கிகள் மூலம் பண உதவி செய்ய கீழ்க்கண்டவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(1) தலா ரூபாய் 100 வீதம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி 137 நூல் சுற்றும் தொழிலாளர்களுக்கு கடன் வழங்க அனுமதி அளித்துள்ளது. இவர்களில் 20 பேர்களுக்கு பணம் வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள 117 பேர்களுக்கும் இன்னும் சில நாட்களில் பணம் வழங்கப்பட்டுவிடும்.

(2) இந்திய ஸ்டேட் வங்கி 5 பசைபோடும் தொழிலாளர்களுக்கு தலா ரூபாய் 500 வீதம் கடனுதவி வழங்கயிருக்கிறது. மேலும் 4 பசைபோடும் தொழிலாளர்களுக்கு இதேபோல் கடனுதவி விரைவில் அளிக்கப்பட இருக்கின்றது.

(3) திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த நெசவு துணை தொழிலாளர்களுக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் கடனுதவி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அண்மையில், ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக பாவு நூல் இடுபவர்கள், பசைபோடுபவர்கள், நூல் சுற்றுபவர்கள் ஆகிய துணை தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட இழப்பைப் பற்றிய விரிவான விசாரணை நடந்து இருக்கிறது. விசாரணையின் முடிவில் உதவி தேவையென்று தெரியவந்தால் இந்தத் துணை தொழிலாளர்களுக்கும் உதவி வழங்குவதைப்பற்றி பரிவுடன் கவனிக்கப்படும்.

(முற்பகல் 10–20)

திரு. ரா. உமாநாத்; அவைத் தலைவரவர்களே, அமைச்சர் கொடுத்த பதிலுக்கு மிக்க நன்றி. விசாரணை நடைபெறுகிறது என்கிற பொழுது அந்த விசாரணை சம்பந்தமாக பாதிக்கப்பட்ட அந்தத் தொழிலாளர்களிடம் இதுவரைக்கும் வந்து கலந்து கேட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, யாராவது ஒரு ஸ்பெஷல் ஆபீசரை இங்கிருந்து அனுப்பி, அந்த விசாரணையின் பொழுது உதவி செய்தால் போதும். அந்த உதவியை அளிப்பதற்கும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைப்பதற்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்படுமா?

அடுத்தது, கடன்கள் பற்றி இங்கே சொன்னார்கள். இரண்டு மாதமாக நானே பாடுபட்டேன். அந்த வங்கிகள், கலெக்டர் சொன்னாலும் கேட்க மறுக்கிறார்கள். 137 பேர்களுக்குக் கடன் வழங்க அனுமதி அளித்தும், 20 பேர்களுக்குத்தான் கடன்

கொடுத்திருக்கிறார்கள். ஃபோட்டோ வேண்டுமென்று கேட்கிறார்கள். பெண்களை அலைக்கழிக்கிறார்கள். ஆகவே, கடன் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கும்போது, அதிலே பிச்சைக்காரத்தனம் ஏன்?

ஆகவே, இரண்டு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். ஒன்று, ஒரு ஸ்பெஷல் ஆபீசர் அனுப்பி, விசாரணைக்கு உதவி, தொழிலாளர்கள் தங்கள் கருத்தைச் சொல்ல சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். இரண்டாவது, வங்கிகள் கொடுக்கும் கடனை எக்ஸ்பிடைட் செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் தெரிவித்த கருத்தின்படி, அவர்கள் அந்தக் கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள் என்பதைக் கேள்விபட்டவுடனே இங்கிருந்து ஒரு அதிகாரியை அனுப்ப வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டொரு நாளில் இங்கிருந்து ஒரு அதிகாரி சென்று, அங்கே இருக்கிற துணை அதிகாரியோடு ஆலோசனை செய்து, அங்கேயிருக்கிற துணைத் தொழிலாளர்கள் பிரச்னை பற்றி ஆலோசனை வழங்க இருக்கிறார்கள்.

வங்கிகளுக்கும், கடன் வழங்குவதில் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்ற எண்ணத்துடன், உறுப்பினர் அவர்கள், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடனே, ''நீங்கள் கொடுப்பது என்று முடிவு செய்துவிட்ட பிறகு காலதாமதம் ஏற்படுத்துவது, வங்கிகளின்மேல் மக்களுக்குத் தவறான கருத்து வந்துவிடும்'' என்று தெரிவித்து இருக்கிறோம். விரைவிலே, அந்தப்பணம் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொ. விஜயராகவன் அவர்கள் அவையிலே இல்லை. ஆகவே, அவரது கவன ஈர்ப்புத் தீர்மானம் தள்ளப்பெறுகிறது.

1978-79 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொதுவாதம்—தொடர்ச்சி.

திரு சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு முன்னால், முதலாவது அவை தொடங்குவதற்கு முன்னால், நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு முன்னால், கவர்னர் உரையை இந்தச் சபையிலே நிகழ்த்துவது வழக்கமாக இருந்தது. அதிலே, அரசாங்கத்தினுடைய கொள்கை, அரசாங்கம் கடைபிடிக்கவேண்டிய எதிர்கால நடைமுறைகளைப் பற்றியெல்லாம் சொல்வது வழக்கம். அதிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை, இந்த நாட்டினுடைய நிலைமைகளையெல்லாம்